பாராளுமன்ற வெளியீட்டு மாலா இல :- **492**

நிறுவனத்தின் பெயர் :- **குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**

பாராளுமன்ற அரச நிதி சம்பந்தமான தெரிவுக் குழுவினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை சம்பந்தமாக

நிலையியற் கட்டளை இல 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின்

அவதானிப்பு மற்றும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் சம்பந்தமாக பாரளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

**அரசாங்கக் கணக்குகள் குழுவினால் (COPA) பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் (பாராளுமன்றத் தொடர் இல. 492) தொடர்பான அவதானிப்புகள் மற்றும் தற்போதைய முன்னேற்றத்தை சமர்ப்பித்தல்**

| தொ. இல | அறிக்கையின் மூலம் அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகள் / குறைப்பாடுகள் | குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமை |
|---|---|---|
| 1. | **முதலாம் பகுதி : 90.00**<br><br>கணக்காய்வாளர் நாயகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து கணக்காய்வு வினவல்களுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப்படவில்லை. அனைத்து வாகனங்களிலும் அரசாங்க இலச்சினை பதிக்கப்பட்டிருக்கவில்லை. ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன் மீதிகள் காணப்பட்டன. ஊழியர்கள் அனைவருக்கும் எழுத்துமூலம் கடமைப் பட்டியல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கடந்த காலங்களில் கடவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்வதற்கு நிலவிய அதிகரித்த கேள்வி காரணமாக, அது தொடர்பான பணிகளை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை வழங்க வேண்டியிருந்தது. எதிர்காலத்தில் கணக்காய்வாளர் நாயகத்தினால் சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு கணக்காய்வு வினவலுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது குழும வாகனங்களுக்கு அரசாங்க இலச்சினை மற்றும் திணைக்களத்தின் பெயர் பொறிக்கப்பட்ட பெயர்ப்பலகைகள் வழங்கப்பட்டுள்ளன. ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையிலுள்ள கடன் மீதிகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், ஊழியர்கள் அனைவருக்கும் எழுத்துமூலம் கடமைகளை ஒதுக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 2. | **இரண்டாம் பகுதி : 74.00**<br><br>2018 ஜனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க, முறையாக தயாரிக்கப்பட்ட மனிதவளத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் தகைமைக்கு உட்பட்ட மட்டத்தில் / எதிர்மறையான மட்டத்தில் அதிருப்தியான மட்டத்தில் காணப்பட்டது. அனைத்து உத்தியோகத்தர்களினதும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடனங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மனிதவளத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. நிறுவனத்தின் கணக்குகள் குறித்து 2025 ஆம் ஆண்டில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து உத்தியோகத்தர்களினதும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடனங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |